# ¹×êÎ ôõÔ îòùÔêêìì åêéùççèìÌ í÷æéæ 2003

2003 Íë Íúâä 03 Íë ¹ùææ åêÌ Ëæèéëê Êôò (îçè×çÇ) òììêêä 13 Íë çõôä æï îôóáìççììÊ.

æùèåê òõê íËÄæë, çè.ã.
åê íéëòòè.

# ¹×êÌ ôõÔ îòùÔêêÌìì åÌéùççèìÌ í÷æéæ
# 2003

2003 Íë Íúâä 03 Íë ¹ùææ åÌêÌ Ëæèéëê Êôò
(îçè×çÇ) òììêêä 13 Íë çõôä æï îôóáìçççìì Ê.

ôéù : 10.00

æùèåêÌ òõê íËÄæë, çè.ã.
åêÌ íéëòòè

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | 2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளும் உள்ளபடியான தேறுமானமும். | 1 |
| | (அ) செலவினம் | 2 |
| | (i) மீண்டுவருஞ் செலவினம் | 2 |
| | (ii) அரசாங்க முதலீடு | 2 |
| | (ஆ) வருமானம் | 4 |
| | (இ) அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் செயற்பாடுகள் | 6 |
| | (ஈ) கடன்படல்கள் | 7 |
| | (உ) அரசாங்கக் கடன் | 8 |

# இறுதி வரவு செலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கை

**2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க**
**நிதி முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்தின் 13ஆம் பிரிவின்**
**நியதிகளின் பிரகாரம் மாண்புமிகு நிதி அமைச்சரினால்**
**வெளியிடப்பட்டது.**

## 1. முன்னுரை

*நிதி அமைச்சர், நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 13அம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் (நி.மு.பொ.ச) நிதி ஆண்டு ஒவ்வொன்றின் தொடர்பிலும் இறுதி வரவு செலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கையை பொதுமக்களுக்கு முன் வைப்பதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் வேண்டப்படுகின்றார்.*

*அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கெதிராக அரசாங்கத்தின் செயலாற்றுகையை மதிப்பிடுவதன் பொருட்டு இந்நாட்டின் நிதி நிலைமை மீது நாளது வரையாக்கப்பட்ட தகவலை வழங்குவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும். இந்த அறிக்கையானது இத் தேவைப்பாட்டிற்கமைவாக வெளியிடப் படுகின்றது.*

*2003ஆம் ஆண்டிற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கையானது இவ் வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம், வருமானம், காசுப்பாய்ச்சல்கள் மற்றும் கடன்படல் ஆகியவற்றின் கூற்று ஒன்றைக் கொண்டிருப்பதுடன் மதிப்பிடப்பட்ட வருமானத்திலும் அல்லது காசிலுமான எந்தக் குறைவுக்கும் மதிப்பிடப்பட்ட செலவினத்தில் அல்லது கடன்படலிலுமான எந்த மிகைக்குமான காரணங்களைத் தருகின்றது.*

## 2. 2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளும் உள்ளபடியான தேறுமானமும்.

*2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளும் செலவினம், வருமானம், கடன்படல் ஆகியவற்றுக்கான உள்ளபடியான தேறுமானம் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன.*

அட்டவணை 1

வரவு செலவுத்திட்ட மதிப்பீடும் உள்ளபடியான தேறுமானமும்

| விடயம் | மதிப்பீடு | | உள்ளபடியானது | |
|---|---|---|---|---|
| | ரூபா பில். | மொ.உ.உ % | ரூபா பில். | மொ.உ.உ % |
| **மொத்தவருமானம்** | **304** | **17.1** | **277** | **15.7** |
| *வரி வருமானம்* | 265 | 14.9 | 232 | 13.2 |
| *வருமானவரி* | 48 | 2.7 | 39 | 2.2 |
| *பெறுமதி சேர்க்கப்பட்ட வரி* | 120 | 6.8 | 97 | 5.5 |
| *மதுவரித் தீர்வைகள்* | 49 | 2.8 | 51 | 2.9 |
| *சுங்கத் தீர்வை* | 33 | 1.9 | 34 | 1.9 |
| *ஏனையவை* | 13 | 0.7 | 10 | 0.7 |
| *வரியல்லாத வருமானம்* | 39 | 2.2 | 45 | 2.5 |
| **மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **438** | **24.6** | **418** | **23.7** |
| *மீண்டுவருஞ் செலவினம்* | 345 | 19.3 | 335 | 19.0 |
| *சம்பளங்களும் கூலிகளும்* | 91 | 5.1 | 92 | 5.2 |
| *பொருட்களும் சேவைகளும்* | 47 | 2.7 | 47 | 2.7 |
| *உதவிப் பணங்களும் மாற்றங்களும்* | 77 | 4.3 | 71 | 4.0 |
| *வட்டிக் கொடுப்பனவுகள்* | 130 | 7.3 | 125 | 7.1 |
| *மூலதனச் செலவினம்* | 82 | 4.6 | 75 | 4.3 |
| *தேறிய கடன் வழங்கல்* | 12 | 0.7 | 8 | 0.4 |
| **முதனிலைப் பற்றாக்குறை** | **4** | **0.2** | **16** | **0.9** |
| **வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை** | **134** | **7.5** | **141** | **8.0** |
| *நிதியளித்தல்* | **134** | **7.5** | **141** | **8.0** |
| *தேறிய வெளிநாட்டுக் கடன்படல்* | 25 | 1.4 | 43 | 2.4 |
| *தேறிய உள்ளூர் கடன்படல்* | 87 | 4.9 | 80 | 4.5 |
| *சொத்து விற்பனைகள் (தனியார் மயப்படுத்தல்)* | 14 | 0.8 | 10 | 0.6 |
| *மானியங்கள்* | 9 | 0.5 | 8 | 0.5 |

அ) செலவினம்

*அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செலவினச் சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளின் விளைவாக 438 பில்லியன் ரூபாவைக் கொண்ட மதிப்பீட்டிற்கு எதிராக 2003ஆம் ஆண்டில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்படலும் 418 பில்லியன் ரூபாவாக இருந்தது. மீண்டுவருஞ் செலவினத்தின் கட்டுப்படுத்தல் குறைக்கப்பட்ட வட்டிச் செலவினத்தின் காரணமானதாக இருந்தது. மூலதனச் செலவினத்திலான செலவின வெட்டுக்களும் மூலதனக் கருத்திட்டங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியங்களின் பயன்படுத்தலில் குறைவும் இருந்ததன் காரணமாக அரசாங்க முதலீடும் 8 பில்லியன் ரூபாவினால் மதிப்பீடுகளைவிடக் குறைவானதாகவிருந்தது.*

*2003ஆம் ஆண்டில் மொத்தச் செலவினமானது 2002ஆம்ஆண்டின் வளர்ச்சியைவிட 3.9 நூற்றுவீதம் கூடுதலான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.*

## (i) மீண்டுவருஞ் செலவினம்

*2003ஆம்ஆண்டில் மீண்டுவருஞ் செலவினம் 335 பில்லியன் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இது 345 பில்லியன் ரூபாவைக் கொண்டவொரு மதிப்பீட்டுடன் ஒப்பிடக்கூடியதாகவுள்ளது. இதன் விளைவாக மீண்டுவருஞ் செலவினமானது மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக 2002ஆம் ஆண்டில் 20.9 நூற்று வீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 19.0 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.*

### வட்டிக் கொடுப்பனவுகள்

*மீண்டு வருஞ்செலவினத்தில் ஆகப்பெரிய ஆக்கக் கூறாகவுள்ள வட்டிக் கொடுப்பனவுகள் 2003ஆம் ஆண்டில் 125 பில்லியன் ரூபாவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நிலவிக் கொண்டிருந்த குறைந்த வட்டிவீதங்களைச் சாதகமாக எடுத்துக்கொண்டு குறைந்த ஆகுசெலவுக் கடனைப் பதிலீடு செய்ததன் மூலம் அரசாங்கக் கடனை மீளமைப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கையே இந்தநிலைமைக்கான பிரதான உதவு காரணியாகவிருந்தது. நிகழ்ச்சித் திட்டக் கடன்கள் மூலமாக நன்கொடை நிதியங்கள் கிடைக்கு நிலையிலிருந்தமை உள்ளூர் கடன் சந்தைமீதான அமுக்கத்தைக் குறைப்பதற்கு உதவியுள்ளது. இதன் பிரகாரம் வட்டிக் கொடுப்பனவுகள் மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக 2002ஆம் ஆண்டில் 7.4 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 7.1 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான காசு முகாமைத்துவ நடவடிக்கைகளும்கூட வட்டிச் செலவினத்தைக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கு உதவியுள்ளது.*

### சம்பளங்களும் கூலிகளும்

*பாதுகாப்புக் கூலிகளையும் உள்ளடக்கி சம்பளங்கள், கூலிகளின் செலவானது 2002ஆம் ஆண்டில் 89 பில்லியன் ரூபாவாகவிருந்த செலவுடன் ஒப்பிடும்போது 92 பில்லியன் ரூபாவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மொத்த உள்ளூர் உற்பத்தியின் ஓர் பங்காக சம்பளங்கள், கூலிகளின் செலவானது 2002ஆம் ஆண்டில் 5.6 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 5.2 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தொழினுட்பத்தரங்கள் நீங்கலாக அரசாங்க சேவையில் ஆட்களின் ஆட்சேர்ப்பு செய்யப்படாதமையானது சம்பளங்கள், கூலிகள் மீது செலவினத்தைக் கட்டுப்படுத்து வதற்கு பெருமளவில் பொறுப்பானதாகவிருந்தது.*

### பாதுகாப்புச் செலவினம்

*போர் நிறுத்தமும் நடைபெறும் சமாதான நடைமுறையும் தொடரப்படுவது பாதுகாப்புச் செலவினம் மீது சாதகமானதும் ஆக்க பூர்வமானதுமாக தாக்கத்தைக் கொண்டிருந்தது. 2003ஆம் ஆண்டில் பாதுகாப்பு மீதான செலவு 62 பில்லியன் ரூபாவாக 4 நூற்றுவீதத்தினால் குறைந்துள்ளது. இதன் விளைவாக மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமாக பாதுகாப்புச் செலவினமானது 2002ஆம் ஆண்டில் 4.1 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 3.5 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.*

### உதவிப் பணங்களும் மாற்றங்களும்

*உதவிப் பணங்கள், மாற்றங்கள் மீதான செலவினம் 2003ஆம் ஆண்டில் 71 பில்லியன் ரூபாவாக 4.7 நூற்றுவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. உதவிப் பணங்கள், மாற்றல்களின் பங்கு 2002ஆம் ஆண்டின் மொத்த உள்ளூர் உற்பத்தியின் 4.7 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டின் மொத்த உள்ளூர் உற்பத்தியின 4 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஓய்வூதியங்கள், சமுர்த்தி மீதான கொடுப்பனவுகள் முறையே 31 பில்லியன் ரூபாவாகவும் 9 பில்லியன் ரூபாவாகவுமிருந்தன.*

## (ii) அரசாங்க முதலீடு

*அரசாங்க முதலீடானது 2002ஆம் ஆண்டில் மொத்த உள்ளூர் உற்பத்தியின் 4.6 நூற்றுவீதத்தைக் கொண்ட அதன் மட்டத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் மொத்த உள்ளூர் உற்பத்தியின் 5.0 நூற்றுவீதமாக அதிகரித்துள்ளது. எனினும் முழு மொத்த நியதிகளில் அரசாங்க முதலீடானது மூலதனச்*

செலவினத்தின் குறைப்பு மற்றும் நன்கொடை நிதியங்களின் பயன்படுத்தலிலான குறைவு ஆகியவற்றின் காரணமாக வரவு செலவுத்திட்டமிடப்பட் செலவினத்தைவிட ஏறக்குறைய 8 பில்லியன் ரூபாவினால் குறைவானதாகவிருந்தது. அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் தேறுகையானது எதிர்பார்க்கப்பட்டதைவிட 8 நூற்றுவீதம் குறைவானதாகவிருந்தது. நாட்டை உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் வைப்பதற்கும் ஆக்கபூர்வமான வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இத்துறைமீது கூடுதலான தீவிர கவனம் செலுத்தப்படுவது அத்தியாவசியமானதாகும்.

**( ஆ) வருமானம்**

2003ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானச் சேகரிப்பு 277 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது 2002ஆம் ஆண்டின் சேகரிப்பைவிட 5.6 நூற்றுவீத அதிகரிப்பை பதிவு செய்கின்றது. இது இவ் வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 91 நூற்றுவீதமாகவிருந்தது. மொத்த வருமானத்தில் வரி வருமானமானது 232 பில்லியன் ரூபாவாகவிருந்ததுடன் வரியல்லாத வருமானம் 45 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2003ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வரிவருமானம் இவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 87 நூற்றுவீதமாகவிருந்தது. வரி வருமானக் குறியிலக்கை அடைய முடியாததற்கு வருமான வரியினதும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினதும் குறைந்த செயலாற்றுகையே பிரதான காரணமாகவிருந்தது. வரியல்லாத வருமானம் 2003ஆம் ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டைவிட 12 நூற்றுவீதத்தினால் கூடுதலான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. வரியல்லாத வருமானம் மத்திய வங்கியிலிருந்து செய்யப்பட்ட மாற்றங்களையும் இலாபங்களையும் (இலாபங்கள்) வேலைநிறுத்தம், கலகம், சிவில் இன மோதல்கள், பயங்கரவாத நிதியத்தையும் சுங்கத் தண்டப் பணங்களையும் உள்ளடக்கியிருந்தது. வரியல்லாத மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2003ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் குறியிலக்கிலும் பார்க்க கூடுதலானதாகவிருந்ததுடன் இவ் வாண்டிற்கான மதிப்பீட்டின் 115 நூற்றுவீதத்தை அடைந்திருந்தது.

மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக மொத்த வருமானமானது 2002ஆம் ஆண்டில் 16.5 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 15.7 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக வரிவருமானமானது 2002ஆம் ஆண்டில் 14 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 13.2 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ள வேளையில் மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக வரியல்லாடு வருமானம் 2.5 நூற்றுவீதத்திலிருந்தது.

**வருமானவரி**

2003ஆம் ஆண்டில் வருமான வரிச் சேகரிப்பு மொத்தமாக 39 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது 2002ஆம் ஆண்டின் வருமானவரிச் சேகரிப்பைவிட 5.2 நூற்றுவீதத்தைக் கொண்ட அதிகரிப்பாகும். எனினும் இது இவ்வாண்டிற்கான மதிப்பீட்டின் 81 நூற்றுவீதத் தேறுகையாகும். மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமாக வருமானவரியிலிருந்து கிடைத்த வருமானம் 2002ஆம் ஆண்டில் 2.4 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 2.2 நூற்றுவீதமாக சிறிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

**கம்பனி வரி**

2003ஆம் ஆண்டில் கம்பனி வரிச் சேகரிப்பு 15 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது 2002ஆம் ஆண்டின் வரிச் சேகரிப்பைவிட 9.6 நூற்றுவீதமாக அதிகரிப்பாகவிருந்தது. ஆனால் இது 2003ஆம் ஆண்டிற்கான குறியிலக்கிடப்பட்ட மட்டத்தைவிட 24 நூற்றுவீதத்தினால் குறைவானதாகவிருந்தது. கம்பனி வரிப்பெறுகைகளில் ஏற்பட்ட மந்தமான வளர்ச்சியானது பல காரணிகளின் நிமித்தம் ஏற்பட்டதாகவிருந்தது. கம்பனி வரி வீதம் 2003 ஏப்பிரல் தொடக்கம் 35 நூற்றுவீதத்திலிருந்து 30 நூற்றுவீதமாக குறைக்கப்பட்டது. அளவுக்கு விஞ்சிய வரிச் சலுகைகளும் விலக்களிப்புக்களும் வரி விடுமுறைகளும்கூட கம்பனி வரித்தளத்தை கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளன. இதன் விளைவாக உயர் இலாபங்களை ஈட்டும் பெரும் எண்ணிக்கைகளிலான கம்பனிகள் வரிகட்டத் தேவையில்லை. இது சிறிலங்கா ரெலிகொம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை, இலங்கை துறைமுக அதிகாரசபை போன்ற பெரிய அரசாங்கதுறை தொழில் முயற்சிகளினால் பொறுப்பேற்கப்படும் முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளின் கணக்கில் செய்யப்படும் வரிக் கொடுப்பனவுகளில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்துடன் கூடுதலாக

அரச வர்த்தக வங்கிகளும்கூட அறவிடமுடியாக் கடன்களின் பதிவழித்தலுக்கு எதிராக வரி நிவாரணத்தைப் பெற்றுள்ளன.

தனியாள் வருமான வரிப்பெறுகைகள் 17 நூற்றுவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இவை 2003ஆம் ஆண்டில் 10 பில்லியன் ரூபாவாகவிருந்தது. வரியின் ஆகக் குறைந்த மட்டம் அதிகரிக்கப்பட்டமையும் வரித் தொகுதிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களும் தனியாள் வருமான வரிச் சேகரிப்பில் பாதகமானவொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

பிடித்து வைத்திருத்தல் வரியிலிருந்து கிடைத்தவருமானம் 2003ஆம் ஆண்டில் கடுமையாக அதிகரித்துள்ளது. இது முந்திய ஆண்டில் கிடைத்த வருமானத்தைவிட 24 நூற்றுவீதத்தைக் கொண்ட அதிகரிப்பாகும்.

வருமானவரிச் சேகரிப்புக்களின் மீதான குறைந்த செயலாற்றுகைக்கு பல காரணங்கள் பங்களிப்புச் செய்துள்ளன. வர்த்தக வங்கிகளின் உயர்ந்த இலாபகரமான வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் கூறுகளின் வரிவிதிப்பு, இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் வரிவிதிப்பு தொடர்பிலான சட்டத்திற்கும் மற்றும் அநேக பிற வருமானம் அதிகரித்தல் நடவடிக்கைகளை அதிகரிப்பதற்குமான வருமான வரிச் சட்டத்திற்கும் திருத்தங்களை இயற்றுவதில் தாமதங்கள் இருந்தன. இத்துடன் கூடுதலாக வருமானவரிகளை மட்டுமன்றி 26 சட்டங்களின் கீழான வரிகளையும் தீர்வைகளையும் அறவீடுகளையும் தண்டப்பணங்களையும் வருமானவரி மன்னிப்பு அளாவியுள்ளதுடன் 2003ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் காலாவதிக்கால எல்லை நீடிக்கப்பட்டமை வரி சேகரிப்பு மீது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியுள்ளது.

### பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து (பெ.சே.வ) கிடைத்தவருமானம் 97 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது 2003ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட குறியிலக்கின் 81 நூற்றுவீதத்தை அடைந்துள்ளது. 2003ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அடையப்படுவதை தடைசெய்த இரண்டு பிரதான காரணிகள் 2003ஆம் ஆண்டில் செயற்பாட்டிலிருந்த இரண்டு அடுக்குவீதக் கட்டமைப்புக் காரணமாக தேயிலை, குத்தகை, நிருமாணம், ஹோட்டல் கைத்தொழில்களுக்கான உள்ளீட்டுக் கடன்களுக்கான உயர்ந்த மீளளிப்புக்களின் கொடுப்பனவும் சில்லறை வியாபார மற்றும் மொத்த விற்பனை வியாபாரத் துறைகளுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் நீடிப்பு பின்போடப்பட்டமையுமாகவிருந்தன. இத்துடன் கூடுதலாக நிதிச் சேவைகள் முதலியனவற்றின் வழங்கல்மீது உள்ளீட்டு வரி உரித்தையும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் விதிப்பையும் மட்டுப்படுத்துவதுபோன்ற பல வருமானம் அதிகரிக்கும் நடவடிக்கைகளைக் கொண்டுள்ள திருத்தங்களை பெறுமதி சேர்க்கப்பட்டவரிச் சட்டத்திற்கு இயற்றுவதில் ஏற்பட்ட தாமதமும் கூட பெறுமதி சோக்கப்பட்ட வரிச் சேகரிப்பின் கீழ் குறைந்த செயலாற்றுகைக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

### பற்று வரி

2003ஆம் ஆண்டில் பற்று வரியிலிருந்து கிடைத்த வருமானம் 4 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது இவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட குறியிலக்கில் 88 நூற்றுவீதத்தை அடைந்துள்ளது.

### மதுவரித் தீர்வை

2003ஆம் ஆண்டில் மது வரித் தீர்வையிலிருந்து கிடைத்த வருமானம் 51 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது இவ்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட குறியிலக்கின் 103 நூற்றுவீதத்தை அடைந்துள்ளது. 2003ஆம் ஆண்டில் மதுபானம், சிகரெட்டுக்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் மீது செய்யப்பட்ட மதுவரிச் சேகரிப்பு முறையே 11 பில்லியன் ரூபாவாகவும் 20 பில்லியன் ரூபாவாகவும் 13 பில்லியன் ரூபாவாகவுமிருந்தது. 2003ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்கள் மீதான மதுவரித் தீர்வைகளிலிருந்து கிடைத்த வருமானம் 7 பில்லியன் ரூபாவாகவிருந்தது. எனினும் மொத்த உள்ளூர் உற்பத்திக்கான மதுவரித் தீர்வைகளின் பங்கு 2002ஆம் ஆண்டில் 3.3 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 2.9 நூற்றுவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

### வெளிநாட்டு வியாபாரம் மீதான வரிகள்

*இறக்குமதித் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 2003ஆம் ஆண்டில் 21 நூற்றுவீதத்தினால் 34 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் இது இவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட குறியிலக்கின் 102 நூற்றுவீதத்தை அடைந்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு இறுப்புக்களிலான அதிகரிப்பும் தீர்வை விலக்களிப்புக்களுடனான பொருட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமையும் வியாபாரத்திலான பங்களிப்பும் பங்களிப்புச் செய்துள்ளன. 2003ஆம் ஆண்டில் துறைமுகங்கள், விமான நிலையங்கள் அபிவிருத்தி அளவீட்டிலிருந்து (து.வி.அ) கிடைத்தவருமானம் 5 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது 57 நூற்றுவீத அதிகரிப்பாகும். எனினும் இந்தச்சேகரிப்பு மதிப்பிடப்பட்ட குறியிலக்கின் 90 நூற்றுவீதமாக மட்டுமேயிருந்தது. மொத்த உள்ளூர் உற்பத்திக்கான இறக்குமதித் தீர்வைகளினதும் துறைமுகங்கள், விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடுகளினதும் வருமானப் பங்கு 2002ஆம் ஆண்டில் 2.0 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 2.3 நூற்றுவீதமாக அதிகரித்துள்ளது.*

### வரியல்லாத வருமானம்

*2003ஆம் ஆண்டில் வரியல்லாத மூலங்களிலிருந்து கிடைத்த வருமானத்தின் பிரதான ஆக்கக்கூறுகள் இலங்கை மத்திய வங்கியிலிருந்து செய்யப்பட்ட இலாப மாற்றங்களும் (10 பில்லியன் ரூபா) கட்டணங்களும் விதிப்புக்களும் (9 பில்லியன் ரூபா) கடன் வழங்கல் செயற்பாடுகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் (8 பில்லியன் ரூபா) மற்றும் இலாபங்களும் பங்கிலாபங்களுமாக (5 பில்லியன் ரூபா) இருந்தன. வரி மூலங்களிலிருந்து கிடைத்த குறைக்கப்பட்ட வருமானத்தின் பின்னணிக்கு எதிராக அரசாங்கமானது மத்திய வங்கியிலிருந்து பெறப்படும் இலாபங்கள், வேலை நிறுத்தம், கலகம், சிவில் இனக்கலவரம், பயங்கரவாத நிதியத்திலிருந்தான மாற்றங்கள் மற்றும் சுங்கத் தண்டப்பணங்கள் ஆகிய எதிர்காலத்தில் கிடைக்காமல்போகும் இலாபங்கள் போன்ற இலாபங்கள் மீது பெருமளவிற்குத் தங்கியிருக்க வேண்டியதாகவிருந்தது. 45 பில்லியன் ரூபாவாகவிருந்த மொத்த வரியல்லாத வருமானம் முந்திய ஆண்டில் 15 நூற்றுவீதமாகவிருந்த மொத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது 16 நூற்றுவீதத்திற்கு கணக்குக் காட்டியுள்ளது. 2002ஆம் ஆண்டில் இருந்ததுபோலவே 2003ஆம் ஆண்டிலும் மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக வரியல்லாத வருமானம் 2.5 நூற்றுவீதமாகவிருந்தது.*

### (இ) அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் செயற்பாடுகள்

*2003ஆம் ஆண்டில் மானியங்களையும் உள்ளடக்கி அரசாங்கத்தின் காசு உட்பாய்ச்சல்கள் 338 பில்லியன் ரூபாவைக் கொண்ட மூல மதிப்பீட்டிற்கு எதிராக 310 பில்லியன் ரூபாவாகவிருந்தன. மூலமதிப்பீட்டிலிருந்து ஏற்பட்ட 28 பில்லியன் ரூபாவைக் கொண்ட விலகல் பிரதானமாக வரி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமானதாகவிருந்தது.*

*தொழிற்பாட்டு முயற்சிகளின் கணக்கிலான காசு உட்பாய்ச்சல்கள் 334 பில்லியன் ரூபாவைக் கொண்ட மூலமதிப்பீட்டிற்கு எதிராக 331 பில்லியன் ரூபாவாகவிருந்து முன்பு தொழிற்பாட்டு முயற்சிகளிலிருந்து 4 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்ட மிகைக்கு எதிராக 21 பில்லியன் ரூபாவைக் கொண்ட தேறிய காசுப் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது.*

*முதலீட்டு முயற்சிகள் மீதான காசு வெளிப்பாய்ச்சல்கள் 119 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்களுக்கு எதிராக 113 பில்லியன் ரூபாவாகவிருந்தது. மூலதனச் செலவினம் மீதான குறை நிரப்பு மதிப்பீடுகள் முதலீடு மீதான மதிப்பிடப்பட்ட வெளிப்பாய்ச்சல்களை அதிகரித்து 19 பில்லியன் ரூபாவிற்கு கணக்குக் காட்டியுள்ளபோதிலும் முதலீடுகள் மீதான மதிப்பிடப்பட்ட வெளிப்பாயச்சல்கள் 139 பில்லியன் ரூபாவிற்கு உயர்வடைந்து உள்ளபடியான வெளிப்பாய்ச்சல்கள் 25 பில்லியன் ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளது.*

*காசுப்பாய்ச்சல் மதிப்பீடுகளினதும் உள்ளபடியான செயலாற்றுகையினதும் பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.*

### 2003ஆம் ஆண்டில் அரசாங்கக் காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகளின் பொழிப்பு

**ரூபா பில்லியன்**

| விடயம் | மூல மதிப்பீடு | குறைநிரப்பு மதிப்பீடுகள் | மொத்த மதிப்பீடு | உள்ளபடியான காசுப் பாய்ச்சல்கள் | விலகல் |
|---|---|---|---|---|---|
| *மொத்தகாசு உட்பாய்ச்சல்கள்* | 338 | 0.6 | 339 | 310 | (29) |
| *தொழிற்படு முயற்சிகளிலிருந்து ஏற்பட்ட மொத்த காசு வெளிப்பாய்ச்சல்கள்* | (334) | (2) | (336) | (331) | 5 |
| *தொழிற்பாட்டு முயற்சிகளிலிருந்து தேறிய காசுப் பயாச்சல்கள்* | 4 | | 3 | (21) | (24) |
| *முதலீட்டு முயற்சிகளிலிருந்து காசுப் பயாச்சல்கள்* | (119) | (19) | (139) | (113) | 25 |
| *தேறிய காசு மிகை/ பற்றாக்குறை* | (115) | | (136) | (134) | 2 |
| *திறப்புக் காசு மீதி* | (5) | | (5) | (5) | |
| *மொத்தக் கடன்படல்கள்* | 311 | 54 | 365 | 358 | (7) |
| *கடன் மீள் கொடுப்பனவுகள்* | 196 | 33 | 229 | 219 | 10 |
| *தேறிய கடன்படல்கள்* | 115 | | 136 | 139 | 3 |
| *தற்காலிகமாக ஈடுபடுத்தப்பட்ட மீதி மற்றும் ஏனைய சீராக்கல்கள்** | | | | 2 | 2 |
| *முடிவடையும் மீதி* | (5) | | (5) | (3) | 2 |
| *அங்கீகரிக்கப்பட்ட கடன்படல்* | 316 | 54 | 370 | 358 | (12) |

** பிற சீராக்கங்கள் மீள நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவி முற்பணங்கள், கட்டுநிதி மீதிகள் மற்றும் பிற வைப்பு மீதிகளின் கணக்கிலானவைகளாகும்.*

## (ஈ) கடன்படல்கள்

*பாராளுமன்றம் 2003 வரவு செலவுத்திட்டத்தில் (புத்தகப் பெறுமதியின் நியதிகளில்) 316 பில்லியன் ரூபாவை முழுமொத்தக் கடன்படல்களாக அங்கீகரித்துள்ளது. மேலே காண்பிக்கப்பட்டுள்ளமன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீடுகளினதும் 33 பில்லியன் ரூபாவைக் கொண்ட உயர் செலவு கடனின் மீள் கொடுப்பனவினதும் காரணமாக மொத்தக் கடன்படல் எல்லையானது 370 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*மொத்த உள்ளூர் கடன்படல்கள் 272 பில்லியன் ரூபாவாகவிருந்தவேளையில் உள்ளூர்க் கொடுப்பனவுகள் 192 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இந்தமீள் கொடுப்பனவுகளில் வங்கித் தொழில்துறை 21 பில்லியன் ரூபாவிற்கு கணக்குக் காட்டியுள்ளது. எனவே தேறிய உள்ளூர் கடன்படல் 80 பில்லியன் ரூபாவாகவிருந்தது.*

*மொத்த வெளிநாட்டுக் கடன்படல்கள் 87 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது 10 பில்லியன் ரூபாவைக் கொண்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்படலையும் 10 பில்லியன் ரூபா கொண்ட தனியார்துறை அபிவிருத்திக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. வெளிநாட்டுக் கடன்களின் கணக்கிலான மீள்*

கொடுப்பனவுகள் 34 பில்லியன் ரூபாவாகவிருந்தது. எனவே தனியார்துறை அபிவிருத்திக் கடன்கள் நீங்கலாக தேறிய வெளிநாட்டுக் கடன்படல்கள் 43 பில்லியன் ரூபாவாகவிருந்தது.

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் நிதியளித்தல் உள்ளூர் வளங்கள் மற்றும் வெளிநாட்டு வளங்களிலிருந்து வழங்கப்பட்ட 80 பில்லியன் ரூபாவையும் 43 பில்லியன் ரூபாவையும் கொண்டிருந்தது. அதேவேளையில் தனியார் மயப்படுத்தலிலிருந்து கிடைத்த மானியங்களும் வரும்படிகளும் முறையே 8 பில்லியன் ரூபாவிற்கும் 10 பில்லியன் ரூபாவிற்கும் கணக்குக் காட்டியுள்ளன.

அரசாங்கத்தின் மேற்போந்த தொழிற்பாடுகளின் அடிப்படைமீது மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமொன்றாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 7.5 நூற்றுவீதத்தைக் கொண்ட மூல மதிப்பீட்டிற்கு எதிராக 8 நூற்றுவீதமாகவிருந்தது. எனினும் 2003ஆம் ஆண்டில் பற்றாக்குறையானது முந்திய ஆண்டின் 8.9 நூற்றுவீதப் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது திருத்தமொன்றைப் பதிவு செய்துள்ளது. 2003ஆம் ஆண்டின் மூல மதிப்பீட்டிற்கு எதிரான பற்றாக்குறையின் விலகல் பிரதானமாக வரி வருமானத்தில் ஏற்பட்ட குறைவின் நிமித்தம் பிரதானமாக ஏற்பட்டது. ஆனால் மீண்டுவருஞ் செலவினம், மூலதனச் செலவினம் ஆகிய இரண்டு செலவினங்களிலும் செய்யப்பட்ட வெட்டின் மூலம் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**(உ) அரசாங்கக் கடன்**

2003ஆம் ஆண்டில் முடிவில் இருந்தவாறான மொத்த நிலுவையாகவுள்ள கடன் 1864 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இதில் 55 நூற்றுவீதமானது உள்ளூர் கடனாகவிருந்தது. மொத்தக் கடன் இருப்பு 12 நூற்றுவீதத்தினால் அதிகரித்திருந்தது. இது முடிவு ஆண்டின் கடனை முந்திய ஆண்டின் 105.4 நூற்றுவீத மட்டத்திலிருந்து மொத்த உள்ளூர் உற்பத்தி விகிதத்திற்கான இந்த முடிவு ஆண்டின் கடனை 105.9 நூற்றுவீதமாக்கியுள்ளது. 2003ஆம் ஆண்டில் உள்ளூர்க் கடன்களிலான அதிகரிப்பு 7.5 நூற்றுவீதமாக அல்லது 72 பில்லியன் ரூபாவாக , 2002ஆம் ஆண்டில் ஏற்பட்ட 16 நூற்றுவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது இருந்தது. உள்நாட்டுக் கடனிலான அதிகரிப்பில் வேகம் குறைந்தமைக்கான காரணம் வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டம் கடன்கள் மற்றும் வர்த்தகக் கடன்கள் மூலமாக முறையே 23 பில்லியன் ரூபாவும் 10 பில்லியன் ரூபாவும்வரை வரவு செலவுத்திட்ட நிதியளித்தல் கிடைக்கக்கூடிய நிலை நிலைவியமையாகும். ரூபா நியதிகளில் வெளிநாட்டுக் கடன்இருப்பு 2003ஆம் ஆண்டில் 17 நூற்று வீதத்தினால் அதிகரித்திருந்தது. இந்தஅதிகரிப்பின் 56 நூற்றுவீதம் அல்லது 68 பில்லியன் ரூபா, நாணயமாற்று வீத மாறுபாடுகளின் கணக்கில் ஏற்பட்டதாகவிருந்தது. நாணயமாற்று வீதமாறுபாட்டின் நிமித்தம் வெளிநாட்டு கடன் இருப்பிலான அதிகரிப்பு யப்பானிய யென்னுக்கும் விசேட எடுப்பளவு உரிமைக்கும் (முறையே 13 நூற்றுவீதமும் 10 நூற்றுவீதமும்) எதிரான ரூபாவின் உயர்ந்த மதிப்பிறக்கத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். இது ஏனெனில் வெளிநாட்டுக் கடன் இருப்பின் 75 நூற்றுவீதமானது யென் மற்றும் விசேட எடுப்பளவு உரிமை கடன்களைக் கொண்டிருக்கின்றன என்பதனாலாகும்.

2003ஆம் ஆண்டில் மொத்தக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் 345 பில்லியன் ரூபாவாகவிருந்தது. இது வட்டிக் கொடுப்பனவுகளின் 125 பில்லியன் ரூபாவையும் கடன் தீர்த்தல் கொடுப்பனவுகளின் 220 பில்லியன் ரூபாவையும் கொண்டுள்ளன. இது 2002 ஆம் ஆண்டின் மொத்தகடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கும் மேலாக 21 நூற்றுவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமாக கடன் சேவைக் கொடுப்பனவுகள் 2002ஆம் ஆண்டில் 17.9 நூற்றுவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 19.6 நூற்றுவீதமாக அதிகரித்துள்ளது. கடன் சேவைக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்பிற்கான பெரிய உதவுகாரணியானது உயர் ஆகுசெலவுக் கடனின் முன் இளைப்பாறுகையின் கணக்கின்மீதான அதிகரித்த கடன் தீர்த்தல் கொடுப்பனவுகளாகும்.

## நிலுவையாகவுள்ள அரசாங்கக் கடன்கள் ( ஆண்டின் முடிவில்)

| | 2002 | | 2003 | |
|---|---|---|---|---|
| | ரூபா பில். | மொ.உ.உ. யின் % | ரூபா பில். | மொ.உ.உ. யின் % |
| **மொத்த உள்ளூர் கடன்** | **948** | **59.8** | **1,020** | **57.9** |
| குறுகிய தவணைக்காலம் | 259 | 16.4 | 250 | 14.2 |
| நடுத்தர, மற்றும் நீண்ட தவணைக்காலம் | 689 | 43.5 | 770 | 43.7 |
| **மொத்த வெளிநாட்டுக்கடன்** | **722** | **45.6** | **844** | **47.9** |
| கருத்திட்டக் கடன்கள் | 640 | 40.4 | 770 | 43.7 |
| கருத்திட்டமல்லாக் கடன்கள் | 82 | 5.2 | 74 | 4.2 |
| **மொத்த நிலுவையாகவுள்ள கடன்** | **1,670** | **105.4** | **1,864** | **105.9** |

## அரசாங்கக் கடன் சேவைக் கொடுப்பனவுகள்

| | 2002 | | 2003 | |
|---|---|---|---|---|
| | ரூபா பில். | மொ.உ.உ. யின் % | ரூபா பில். | மொ.உ.உ. யின் % |
| **கடன் தீர்த்தல் கொடுப்பனவுகள்** | **168** | **10.6** | **220** | **12.5** |
| உள்ளூர் | 131 | 8.3 | 185 | 10.5 |
| வெளிநாடு | 37 | 2.3 | 34 | 1.9 |
| **வட்டிக் கொடுப்பனவுகள்** | **117** | **7.4** | **125** | **7.1** |
| உள்ளூர் | 106 | 6.7 | 114 | 6.5 |
| வெளிநாடு | 11 | 0.7 | 12 | 0.7 |
| **மொத்த கடன் சேவைக் கொடுப்பனவுகள்** | **285** | **17.9** | **345** | **19.6** |